**செய்தி வெளியீடு எண்: 747** **நாள்: 12.12.2012**

இன்று (12—12—2012) சென்னையிலிருந்து காணொலி காட்சி மூலம் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களின் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கல்வி உதவித் தொகை வழங்குதல், மிதிவண்டிகள் விநியோகம், புதிய விடுதிகள் திறத்தல் மற்றும் விடுதிகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களும் துரிதமாக செயல்பட்டு தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் எய்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் அரசு செயலாளர் திரு. தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் இயக்குநர் டாக்டர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**